**கரைச்சி பிரதேச சபை - 2021**
**-------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்
**----------------------------**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
**--------------------------------------------------**

கரைச்சி பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளளவாறு கரைச்சி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை
-----------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்
------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க, கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காமையுடன் அட்டுறு அடிப்படையிலும், காசு அடிப்படையிலுமான இறண்டு வகையிலுமான கணக்குகள் வைக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவத்தினால் கருத்து வழங்கப்படவில்லை. | ஓர் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கு அமைவாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்ப்பெற ண்டிய வாடகை மற்றும் கட்டணம் ரூபா 2,838,050 கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன், சென்ற ஆண்டு வாடகை மற்றும் கட்டண நிலுவை ரூபா 2,858,125 மீளாய்வாண்டின் வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | தொடர்ந்து வரும் நிதியாண்டில் பெறவேண்டிய வருமானமாக சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்கீட்டு தத்துவங்கள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவாககணக்குகள் தயாறிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 159 | 2- 5 வருடங்களாக ரூபா 8,453,402 பெறுமதியான வருமதியான வாடகை மற்றும் கட்டணங்களை அறவீடு செய்வதற்கான எழுத்தாணை சபையின் செயலாளரினால் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா சூழ்நிலையால் வாடகை மற்றும் கட்டண நிலுவைகள் பதிவளிப்பு செய்வதற்கும், ஏனைய வருமதியான நிலுவைகளை அறவிடுவதற்கும், எழுத்தாணை பிறப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி செயல்பட வேண்டும். |
| (ஆ) வடமாகாண சபை மாகாண நிதி விதி – 2008 163.3(ii) | 3 வருடத்திற்கு மேல் பழைய ரூபா 1,000,000 பெறுமதியான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ஒரு முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பண சீராக்கத்திற்கான நிதியானது வரிசை அமைச்சினால் (line ministry) விடுவிக்கப்படாமை இதற்கு காரணமாகும். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 147,229,986 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 129,257,227 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2 தொடக்கம் 3 வருடங்களாக பழைய ரூபா 38,464,824 வான வீதவரி மற்றும் வரி நிலுவையினை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2021 திசெம்பர் 31 உள்ளவாறு ரூபா 2,260,800 அறவிடப்பட்டுள்ளது. நடுக்கட்டல் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் குறித்த பதவிக்கு ஒருவரே முன்வந்த நிலையில் நிலுவை வருமானத்தை முழுமையாக அறவிடமுடியாதுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையின் எல்லைக்குட்பட்ட 14 வட்டாரங்களின் ஆதனங்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு வீதவரி வருமானங்கள் அறவிடுவதற்கு சபையினால் 03 வருடங்களாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 159 இன் பிரகாரம், உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் குறித்த 14 வட்டாரங்களும் கட்டமைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்படாமை காரணமாக வரி மதிப்பீடுகளை மேற்கொள்ள இயலாதுள்ளது. | -மேற்படி- |
| (இ) | 02 தொடக்கம் 05 வருடங்களாக பழைய ரூபா 8,609,951 வான வாடகை மற்றும் குத்தகை நிலுவையினை அறவீடு செய்ய ப்பட்டிருக்க வில்லை. | நிலுவைகளை கட்டண நிலுவைகளுக்கான அறவீடு மேற்கொள்ளும் செயற்பாடு நடைபெற்று வருவதுடன் வழக்குத் தாக்கல் செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைக | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 05 உத்தியோகத்தரிடமிருந்து இடர்கடன் நிலுவை ரூபா 275,293 இனை அறவிடுவதற்கு 02 தொடக்கம் 05 வருடங்களாக நடவடிக்கைகள் | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவையினை தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | வியாபார நடவடிக்கையொன்றிக்காக கரடிப்போக்கு சந்தியில் உள்ள சபைக்கு உரித்தான காணியொன்று குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகைதாரரினால் உடண்படிக்கை நிபந்தனையை மீறி நிரந்தரக் கட்டிடமொன்று குரித்த காணியில் கட்டப்பட்டுள்ளது. | எவ்வித நட்ட ஈடும் கோராது உடனடியாக கடையினை அகற்றி நிலத்தினை சபைக்கு ஒப்படைப்பதாக எழுத்து மூலம் சபைக்கு அறிவித்துள்ளார். | சுபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பல் வேண்டும். |
| (இ) | பயன்படுத்தப்படுகின்ற 15 வாகனங்கள் சபைக்கு உரித்தானதாக்கப்பட்டிருக்கவில்லை. | சில வாகனங்களின் உரிமம் வேறு அரச திணைக்களங்களின் பெயர்களில் காணப்படுகின்றது. அத்துடன், மேல் மாகாணத்திற்குரிய பதிவுகளில் காணப்படுகின்ற வாகனங்களுக்குரிய உரிமம் பெறுவதில் சிரமம் காணப்படுகின்றது. | வாகனங்களின் உரிமம் தாமதமின்றி உரித்தாக்கப்படல் வேண்டும். |